பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 04 2025 7 15
வியாழக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று தாய்லாந்து புறப்பட்டுச் சென்றார்.
2. வக்ஃப் சட்டத்திருத்த மசோதா அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு தவறானது என்று மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.
3. மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டதை உறுதி செய்வதற்கான சட்டப்பூர்வ தீர்மானம் நேற்று மக்களவையில் நிறைவேறியது.
4. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மரில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக உள்நாட்டு கிளர்ச்சியாளர்களுடன் தற்காலிக சண்டை நிறுத்தம் செய்வது என அந்நாட்டு ராணுவம் முடிவு செய்துள்ளது.
5. ஐ எஸ் எல் கால்பந்து அரை இறுதி போட்டியின் முதலாவது சுற்றில் பெங்களூரு அணி – கோவா அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று காலை தாய்லாந்து புறப்பட்டுச் சென்றார்.

இரண்டு நாட்கள் பயணமாக அங்கு செல்லும் பிரதமர், இன்று மாலை பாங்காக்கில் அந்நாட்டு பிரதமர் திரு **Paetongtarn shinawatra** -வை சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய விவகாரங்கள் குறித்து விவாதிக்கிறார்.

அத்துடன் பல்வேறு ஒப்பந்தங்களிலும் இரு தலைவர்களும் கையெழுத்திடுகின்றனர்.

நாளை நடைபெறும் பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்கிறார்.

தாய்லாந்து நாட்டின் பத்தாவது மன்னர் ராமா மற்றும் இளவரசியையும், திரு நரேந்திரமோடி சந்தித்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தாய்லாந்தில் பயணத்தை முடித்துக் கொண்டு நாளை இலங்கை செல்லும் பிரதமர், அனுராதபுரத்தில் இந்தியாவின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

இந்த பயணத்தின்போது இலங்கை அதிபர் திரு அனுர குமார திசநாயகே-வையும் அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

**[]<<<>>>[]**

மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டதை உறுதி செய்வதற்கான சட்டப்பூர்வ தீர்மானம் நேற்று மக்களவையில் நிறைவேறியது.

இந்த தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாநிலத்தில் வன்முறை சம்பவங்கள் நடைபெறுவதால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளவதாகத் தெரிவித்தனர்.

இந்த விவாத்திற்கு பதிலளித்து பேசிய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, மணிப்பூரில் இயல்பு நிலையை திரும்பச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

அம்மாநிலத்தில் அமைதியை நிலைநாட்ட அரசு முயற்சிகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த நான்கு மாதங்களில் அம்மாநிலத்தில் வன்முறை தொடர்பான உயிரிழப்பு ஏதும் நிகழவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்ட பிறகு இரண்டு குழுக்களுடன் அரசு பேச்சு நடத்தியதாகவும் திரு அமித்ஷா கூறினார்.

[]<<<>>>[]

வக்ஃப் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.

மசோதாவிற்கு 288 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

232 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த மசோதா மீது 12 மணி நேரத்திற்கும் மேலாக மக்களவையில் விவாதம் நடைபெற்றது.

பாரம்பரிய தலங்களை பாதுகாக்கும் வகையிலும், சமூக நலனை மேம்படுத்தும் வகையிலும், வக்ஃப் சொத்துக்களின் மேலாண்மையை நெறிப்படுத்துவதை வக்ஃப் திருத்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

சொத்து நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதையும், மூலமும், வக்ஃப் வாரியங்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதையும், தொடர்புடையவர்களின் உரிமையை பாதுகாப்பதையும் இந்த சட்டத்தி.ருத்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

இஸ்லாமிய பெண்களின் குறிப்பாக கணவனை இழந்த, விவாகரத்துபெற்ற பெண்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையை மேம்படுத்துவதற்கும் இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

வக்ஃப் வாரியத்தின் சிறந்த நிர்வாகத்திற்காக இஸ்லாமியர்களின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இதில் இடம்பெறுவார்கள் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

இந்த மசோதா குறித்த விவாதத்திற்கு பதிலளித்து பேசிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, வக்ஃப் வாரிய நடவடிக்கைகளில் இஸ்லாமியர் அல்லாதோர் தலையிடுவார்கள் என்று கூறப்படும் குற்றச்சாட்டு தவறானது என்று தெரிவித்தார்.

சிறுபான்மையினருக்கு இந்தியா பாதுகாப்பான நாடு என்று கூறிய அவர், இது சிறுபான்மையினருக்கு எதிரான அரசு என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை மறுத்தார்.

பார்சி உள்ளிட்ட சிறிய சிறுபான்மையினர் நலனில்கூட அரசு அக்கறை கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.,

இந்த மசோதா அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த திரு கிரண் ரிஜிஜூ, இதற்கான உரிய காரணத்தை அவர்களால் தெரிவிக்க இயலவில்லை என்று குறிப்பிட்டார்.

இது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றால் நீதிமன்றம் ஏன் இதை ரத்து செய்யவீல்லை என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிய அனைத்து திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டு, வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.

**[]<<<>>>[]**

நாட்டில் உள்ள ஆறு லட்சத்து 44 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் ஆறு லட்சத்து 25 ஆயிரம் கிராமங்களில் மொபைல் சேவை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய தொலைத் தொடர்புத்துறை இணை அமைச்சர் திரு பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், ஆறு லட்சத்து 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் நான்கு-ஜி மொபைல் சேவை அளிக்கப்படுவதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதாக கண்டறியப்பட்டுள்ள ஒரு லட்சத்து 75 ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக தொலைத் தொடர்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பல்வேறு போலி அழைப்புகள் 0 7 3 1, 0 7 9, 0 8 0 உள்ளிட்ட எண்களிலிருந்து தொடங்குவதாக அது கூறியுள்ளது.

இதனை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தொலைத் தொடர்பு சேவை நிறுவனங்களை தொலைத் தொடர்புத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.,

[]<<<>>>[]

சத்திஷ்கரில் அரசுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக மாவோயிஸ்ட்டுகள் அம்மாநில அரசுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

இதையடுத்து மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிராக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கையை நிறுத்தி வைக்குமாறு அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதற்கு பதிலளித்துள்ள சத்திஷ்கர் துணை முதலமைச்சரும், உள்துறை அமைச்சருமான திரு விஜய் சர்மா, எந்தவித முன் நிபந்தனையுமின்றி பேச்சு நடத்த மாநில அரசு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

ராய்ப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நக்ஸலைட்டுகள் உண்மையிலேயே பேச்சு நடத்த விரும்பினால் அவர்களுடைய பிரதிநிகளின் பெயரையும், நிபந்தனைகளையும் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மரில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக உள்நாட்டு கிளர்ச்சியாளர்களுடன் தற்காலிக சண்டை நிறுத்தம் செய்வது என அந்நாட்டு ராணுவம் முடிவு செய்துள்ளது.

இம்மாதம் 22-ஆம் தேதி வரை இந்த சண்டை நிறுத்தம் அமலில் இருக்கும் என்று ராணுவம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும், மீறினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கிளர்ச்சியாளர்களை மியான்மர் ராணுவம் எச்சரித்துள்ளது.

இதற்கிடையே நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாயிரமாக அதிகரித்துள்ளதாகவும், நான்காயித்து 500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

[]<<<>>>[]

இந்தியா அமெரிக்கா இடையேயான கடற்படை கூட்டுப்பயிற்சி விசாகப்பட்டினத்தில் நேற்று தொடங்கியது.

இந்திய கடற்படை போர்க்கப்பலான ஐ என் எஸ் ஜலாஸ்வால் கப்பலில் துறைமுக தளத்தில் நடைபெறும் பயிற்சி இம்மாதம் ஏழாம் தேதி வரை நடைபெறவுள்ளது.

எட்டாம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை கடலில் இப்பயிற்சி நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான பரஸ்பர வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 26 சதவீதம் வரி விதிக்கப்படுவதாக தெரிவித்தார்.

சீனாவுக்கு 34 சதவீதமும், பங்ளாதேஷுக்கு 37 சதவீதமும், பாகிஸ்தானுக்கு 29 சதவீதமும், இலங்கைக்கு 44 சதவீதமும், இஸ்ரேலுக்கு 17 சதவீதமும் இறக்குமதி வரி விதிக்கப்படுவதாக அவர் கூறினார்.

இந்த வரிகள் முழுமையான பரஸ்பர வரியாக இருக்காது என்றும் திரு டொனால்டு ட்டிரம்ப் தெரிவித்தார்.

இதற்கிடையே அமெரிக்காவின் இந்த இறக்குமதி நியாமற்றது என்று பல்வேறு நாடுகள் தெரிவித்துள்ளன.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து அரை இறுதி போட்டியின் முதலாவது சுற்றில் பெங்களூரு அணி – கோவா அணியை வென்றது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி இரண்டு – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் கோவா அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள மற்றொரு அரை இறுதியின் முதலாவது சுற்றில் ஜாம்ஷெட்பூர் - மோகன் பெஹான் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் எட்டு விக்கெட் இழப்புக்கு 169 ரன் எடுத்தது.

170 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி 17 புள்ளி ஐந்து ஓவரில் இரண்டு விக்கெட்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

அதிகபட்சமாக ஜோஸ் பட்லர் 39 பந்துகளில் 73 ரன் எடுத்தார்.

கொல்கத்தாவில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொல்கத்தா அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஷாக்கேத் மைநேனி – ராம்குமார் ராமநாதன் இணை காலிறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய போட்டியில் இந்த இணை 6-1, 6-2 என்ற செட் கணக்கில அர்ஜெண்டினாவின் பெட்ரோ **cachin** –மஸ்பெயினின் **Izancorretja** இணையை வென்றது.

***End of News***